DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC . 221/2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | *இப்பராகிம்* |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 18.09.2019

*நான் தற்போது பாளையங்கோட்டை கே.டி.சி. நகரில் வசிக்கிறேன். ஆறாம்பண்ணை மீரா மெட்ரிக் பள்ளியில் பொறுப்பாளராக பணிசெய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 21.04,.2016ம் தேதி மாலை 5.30 மணிக்கு மீரா மெட்ரிக் பள்ளி முன்பு பஸ்க்காக நான் பேருந்துநிறுத்தத்தில் நான் காத்துக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி என்னை நீயாருக்குபிறந்தாய்ல என்று அசிங்கமாக அவமானமாக பேசி ஸ்கூலை எவ்வாறு நடத்துவாய் என்று கூறி கையில் இருந்த ஆணியைபுடுங்கும் சுத்தியலால் எனது வலது கண்ணத்தில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார். என்னை கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்தார். என்னை எனது பள்ளிமுன்பு பொதுஇடத்தில் அவமானமாக பேசியதால் எனக்கு மனஉளைச்சலாக இருந்தது. என்னை கொலைமிரட்டல் செய்ததால் உயிர்பயம் ஏற்பட்டு நான் வெளியே செல்வதற்கு பயந்து வாழ்ந்து வருகிறேன். இந்த சம்பவத்ததை முகமதுஉசேன் எனது உறவினர் ,மற்றும் வாட்மேன் ஷேக்பரித் பார்த்தார்கள். முகமதுஉசேன் அப்போது என்னுடன் திருநெல்வேலி போவதற்காக நின்றிருந்தார். பின்பு நான் பாளை அரசுமருத்துவமனையில் சிகிட்சைக்காக சேர்த்ததார்கள் அங்கு வந்த முறப்பநாடு போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன் அதில்நான் கையொப்பம் செய்திருக்கிறேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆகும்.** ஏற்கனவே எனக்கும் அப்துல்சலாம் என்பவருக்கும் மீரா மெட்ரிக் பள்ளியை நிருவகிப்பதில் பிரச்சனை இருந்தது இது சம்மந்தமாக ஏற்கனவே சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஆஜர் எதிரி அப்துல்சலாமுக்கு ஆதரவாக செயல்படுபவர் அந்த முன்பகை காரணமாக சம்பவம் நடந்தது. இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.*

***எதிரிதரப்பில் கு.வி. இல்லை.***

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC . 221/2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | முகமதுஉசேன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 18.09.2019

*நான் ஆறாம்பண்ணையில் வசிக்கிறேன்.அ மளிகை கடை வைத்து நடத்திவருகிறேன். ஆஜர் எதிரியைதெரியும். தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. சம்பவத்தன்று மாலை 5 .30மணிக்கு மீரா பள்ளிக்கு முன்பாக வைத்து ஆஜர் எதிரி ஆணியை பிடுங்கும் சுத்தியலை வைத்து அ.சா.1னை வலதுபக்ககண்ணத்தில் அடித்து காயப்படுத்தினார், மேலும் அ.சா.1னைஆஜர் எதிரி அசிங்கமாக திட்டினார். இநத சம்பவத்ததை நான் மற்றும் வாட்ச்மேன் ஷேக்பரிதும் நேரில் பார்த்ததோம்.சம்பவம் முடிந்ததும்அ.சா.1 சிகிட்சைக்காக மருந்துவமனை செல்வதாக என்னிடம் கூறிச்சென்றார் ஏற்கனவே அப்துல்சலாம்கும் அ.சா.1க்கும் மீரா மெட்ரிக் பள்ளியை நிறுவகிப்பதில் பிரச்சனை இருந்து வந்தது ஆஜர் எதிரி அப்துல்சலாமுக்கு எதிராக நடப்பவர்.போலிசார் விசாரித்தார்கள்.*

***எதிரிதரப்பில் கு.வி. இல்லை.***